பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 13 சனிக்கிழமை (30-09-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 310

# கல்குடா பொலீஸ் நிலையத்தை புலிகள் கைப்பற்றி அழித்தனர்!

## 23 பொலீஸார் பலி


யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 30

தீவிர பாதுகாப்பு மிக்க பகுதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு — கல்குடா பொலிஸ் நிலையத்தை நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் தாக்கி தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். கைப்பற்றிய பொலீஸ் நிலையத்தை புலிப் போராளிகள் பின் தாக்கி முற்றாக அழித்துவிட்டனர்.

இத் துணிகரத் தாக்குதலின் போது 23 பொலீஸார் கொல்லப்பட்டனர். மேலும் 12 பொலிஸார் காயமடைந்தனர் பொலீஸ் நிலையத்தில் இருந்து ஒரு மோட்டார் உட்பட 20 துப்பாக்கிகளை புலிகள் கைப்பற்றினர்.

நேற்று முன்தினம் இரவு 11-30 மணியளவில் தாக்குதல் ஆரம்பமானது. சுமார் 30 நிமிடங்களில் பொலீஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

(7ஆம் பக்கம் பார்க்க)




நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட மாணவர்களில் சிலர்.

# நகரில் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு நேற்று ஆர்ப்பாட்ட பேரணி

## பிரேதப் பெட்டிகளை எடுத்துச் சென்றனர்

யாழ்ப்பாணம், செப். 30

பேரினவாத ஸ்ரீலங்கா அரசின் இனப் படுகொலைகளையும், நாகர்கோயில் மகாவித்தியாலய மாணவர்கள் விமானக் குண்டுவீச்சால் கொல்லப்பட்டதனையும் கண்டித்து நேற்று யாழ். நகரில் நடைபெற்ற வெகுஜன ஆர்ப்பாட்டப் பேரணியில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர். பேரணியின் முன்னால் மாணவர்கள் பிரேதப் பெட்டிகளை எடுத்துச் சென்றனர்.

பேரணியில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கலந்து கொண்டு ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

சமீப காலங்களில் இங்கு இடம்பெற்ற பேரணிகளோடு ஒப்பிடும்போது, இப்பேரணி வியக்கத்தக்க வகையில் பிரமாண்டமான அளவில் நடைபெற்றது.

யாழ். குடாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் காலை 8-00 மணியிலிருந்து மதகுருமார், மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை ஊழியர்கள்,

[7ஆம் பக்கம் பார்க்க]

## அனுருத்த, ஜெரி பலாலிக்கு விஜயம்

கொழும்பு, செப் 30

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று பலாலிக்கு

[7ஆம் பக்கம் பார்க்க]

## நெஞ்சை நெக்குருக்கிய அதிபரின் உரை

யாழ்ப்பாணம், செப். 30

அரசாங்கத்தின் இனப்படுகொலையைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணியின் முடிவில் யாழ். செயலகத்தின் முன்னால் நடைபெற்ற கூட்டத்தில்—

அழுகை ஒலி விரவியது; மக்களில் பலரும் அழுதனர்; மாணவ மாணவிகள் தேம்பித் தேம்பி அழுதனர்.

அங்கு சோக நிகழ்வின் நிழல் அவலங்கள் படர்ந்தன. மக்கள் முகங்களை சோக உணர்வலைகள் மூடிக்கொண்டன.

மேடையில் வைக்கப்பட்டிருந்த பிரேதப் பெட்டிகள் சோகக் காட்சிக்கு மேலும் உருவூட்டின.

கூட்டத்தின் இறுதிக் கட்டத்தில் நாகர் கோவில் மகாவித்தியாலய அதிபர் திரு சி. மகேந்திரன் பேசத் தொடங்கியதும் கூட்டத்திலிருந்து விக்கலுடன் கூடிய

(7 ஆம் பக்கம் பார்க்க)






ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட மாணவர்களில் சிலர் பிரேதப் பெட்டிகளைச் சுமந்து வருவதையும் பதாகைகளைத் தாங்கியவாறு பேரணி வருவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராண்டு உருண்டதுவோ!
நெஞ்சம் குமுறும்

## நினைவஞ்சலிகள்



**தெய்வேந்திரம் சுஜீவா (ஜீவா)**
[சாவ. இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி]

மனம் மகிழ: 10 - 01 - 1974
மனம் நெகிழ: 11 - 10 - 1994

**ஆண்டுத் திதி: 30 - 09 - 1995**

உள்ளத்தில் குழந்தையாய் உருவத்தில் கனவுக் கன்னியாய், கல்விசனில் தலைமைபெற பள்ளி தனிக் கித்தகியாய் நெறிதளரா நாயகியாய், நேர்மைமிகு இலட்சுமியாய், ஈடில்லை இனி உனக்கென பெற்றோரும், உற்றாரும் இதயத்தில் இருத்தி நினைவுபெற விடைபகன்று செல்லாமல் விடைபெற்றுச் சென்று விட்டாய் வாடிய மனங்களோடு எம் மனம்வென்ற ஜீவா செல்வத்திற்கு வருடம் மறைந்த மலரஞ்சலிகள்.

அன்பு அம்மா, ஆசைத் தம்பிமார்,
மற்றும் உறவினர்கள்.

மருதடி மேற்கு,
சாவகச்சேரி.
(38768)

# மட்டக்களப்பு, திருமலை படையினர் மீது தாக்குதல்

நேற்றும், நேற்று முன்தினமும் மட்டக்களப்பிலும், திருமலையிலும் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் படையினருக்கு இழப்புகள் ஏற்பட்டன.

மட்டக்களப்பில்

மட்டக்களப்பின் கிண்ணியடிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது நேற்று நடத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்றுக் காலை 9.10 மணிக்கு கிண்ணியடி இராணுவ முகாமில் இருந்து துப்புரவு செய்ய வந்த இராணுவத்தினர் மீது முகாமில் இருந்து 600மீற்றர் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடத்தினார்கள்.

இத்தாக்குதலில் ரி 56 - 2 ரகத் துப்பாக்கி — 2, அதற்குரிய மகஸின் — 4, நடுத்தர ரவைகள் 230, குண்டு துளைக்காத கவசம் — 1, கைக்குண்டு — 2 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

திருமலையில்

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் திருகோணமலையில் புல்மோட்டைப் பகுதி இராணுவ முகாமில் இருந்து 14ஆம் கட்டை இராணுவ முகாமுக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலை நடத்தினர்.

இதன்போது இராணுவத்துக்கு ஏற்பட்ட சேதவிவரம் தெரியவரவில்லை.

இத்தாக்குதலின் பின்னர் முகாமில் இருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் லெப்டினன்ட் ஜெயரூபன் [செல்வரத்தினம் ரவிச்சந்திரன்— முழங்காவில், மன்னார்] என்ற போராளி வீரச்சாவடைந்தார். [இ-3]

## தொழில் வங்கி: பதிவுக் கட்டணம் உயர்வு

யாழ்ப்பாணம், செப். 30

தமிழீழ நிர்வாக சேவையின் தொழில் வங்கியில் தொழில் அற்றோர் பதிவு செய்து கொள்வதற்கு இதுவரை பதிவுக் கட்டணமாக 10 ரூபா அறவிடப்பட்டது.

காகிதாதிகளின் விலையேற்றம், அச்சுச் செய்வித்தலில் ஏற்பட்டுள்ள அதிகரித்த செலவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு இக்கட்டணம் நாளை முதலாம் திகதி தொடக்கம் 25 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது என, தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். [ஓ]

## ஆங்கில தினம்

சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் ஆங்கில தின விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினர்களாக ஆங்கிலப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு டி. ஆர். அருமைநாயகமும் அவரது பாரியாரும் கலந்து கொள்வர். (ஓ)

## பிறந்த நாள் வாழ்த்து

(30 - 09 - 95)

★ செல்வி டயனா ★
[நிசா]

கிருஸ்ணகுமார் கலாநிதி தம்பதிகளின்

செல்வப்புதல்வி டயனா (நிசா) தனது ஆறாவது பிறந்த நாளை இன்று [30-09-1995] கனடாவில் தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, மாமா, சித்தி கச்சேரியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தை, மாமா, சாவகச்சேரியில் வசிக்கும் மாமா, மாமி, மச்சான், ஹொலண்டில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, ராசன் மாமா, தங்கை சயினா, கனடாவில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், அக்காமார் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
விஜியன்மாமா

(38763)

## புவியியலாளன் இதழ் - 10

வெளியீட்டு நிதிக்காக
யாழ். பல்கலைக்கழக புவியியற்கழகம்
நடத்தும்

## கலை நிகழ்ச்சிகள்

திரு:- வர்ணராமேஸ்வரன் குழுவினரின்
"இசை நிகழ்ச்சி"
இராமநாதன் நுண்கலைக்கழக மாணவிகளின்
"நடன நிகழ்ச்சி"

இடம்:— கைலாசபதி கலையரங்கம்
காலம்:— இன்று [30-09-1995] சனிக்கிழமை
மாலை 3 மணி
[ஒருகாட்சி மட்டும்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நன்றி

புவியியற் கழகம்
யாழ். பல்கலைக்கழகம்

(38764)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 10 — 02 — 1922
மறைவு: 01 — 09 — 1995

அமரர்

**நாகநாதர் பொன்னம்பலம்**
(சுப்பிரமணியம்)

எங்கள் குல தெய்வத்தின் இறுதிக் கிரியை, அந்தியேட்டிக் கிரியை முதலியவற்றில் கலந்து ஆறுதல் அளித்தும், வேண்டிய வேண்டியாங்கு உதவிகள் பல ஆற்றியும் பங்களிப்புச் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவர்க்கும் எமது பசுமையான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை நாளை 01 - 10 - 1995 ஞாயிற்றுக்கிழமை பகல் 12-00மணி அளவில் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியை, வீட்டுக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

றொ. தியாகேஸ்வரி
(மனைவி)

கைதடி - நாவற்குழி,
கைதடி.
(சி-2378)

கணபதி துணை
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம.

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் யுவ வருடம் புரட்டாதி மாதம் 14 ஆம் நாள் (01 - 10 - 1995) ஞாயிற்றுக்கிழமை காலை 7-02 மணி முதல் 8-00 மணி வரையுள்ள சுபவேளையில்

எமது மகள்
**செல்வி கமலேஸ்வரிக்கு**

பூப்புனித நன்னீராட்டு விழா நடத்த பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி
கி. கணேசன் தம்பதிகள்
[தாய் மாமன்]
கொழும்பு.

திரு. திருமதி
ச. சவுந்தரராஜன் தம்பதிகள்
(துர்க்கா நகைப்பூங்கா)
இல. 159, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(38762)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவின் ஆட்சியில் தமிழரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை

## பேரணியின் இறுதியில் துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம், செப். 30

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்திலோ, மட்டக்களப்பிலோ, கொழும்பிலோ, இலங்கையின் எந்தப் பகுதியிலோ தமிழரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. தமிழர்கள் சுய கௌரவத்துடன் வாழ முடியாத நிலையே இப்போது நிலவுகிறது.

— இவ்வாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான பேரணியின் இறுதியில் யாழ். செயலகத்துக்கு முன்னால் நேற்று நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் குறைகளை நீக்கி அவர்கள் உரிமைகளை வழங்கி நீண்ட காலப் போருக்கு முடிவு கட்டும் வாக்குறுதியுடன் பெரும்பான்மை வாக்குகளுடன் பதவிக்கு வந்த ஜனாதிபதி இன்று என்றுமில்லாத அளவுக்கு எமது மக்களைத் துன்பப்படுத்துகிறார்.

இந்த அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துள்ளனர். ஆரம்பத்திலிருந்த நம்பிக்கைகள் தவிடுபொடியாகி விட்டன.

சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பல நூற்றுக்கணக்கான மக்கள் காயப்படுத்தப்பட்டனர் பல்லாயிரம் மக்கள் இடம்பெயரச் செய்யப்பட்டு நிர்க்கதி அடைந்துள்ளனர்.

நாம் எத்தனையோ மகஜர்களை அனுப்பினோம். அரசாங்கம் கருத்தில் எடுக்கவில்லை கொல்லப்பட்டவர்களையும் காயப்பட்டவர்களையும் மறைக்க அரசாங்கம் முனைகிறது.

நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில் 25 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கொல்லப்பட்டனர். 35 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பல மக்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் உள்ளனர். இவர்களைப் புலிகள் என்று காரணம் காட்ட அரசாங்கம் முயல்கிறது.

அரசின் தடைகளால் எமது கல்வி அழிகிறது. எமது பாடசாலைகள் அகதி முகாம்களாக அல்லது இராணுவ முகாம்களாக மாறியுள்ளன.

### உரிமைக்கே போராடுகிறோம்

எமது சந்ததி இதன் வழி நலிவடையப்போகிறது. நாங்கள் இன்னுமொரு இனத்தை அடிமைகொள்ளவோ எதிர்க்கவோ இல்லை. எமது உரிமைகளுக்காகவே போராடுகிறோம்.

எமது நிம்மதி, கௌரவத்திற்காகவே செயற்படுகிறோம். இவ்வாறு நாங்கள் குரல் கொடுக்கும்போது அரச பயங்கரவாதம் எம்மீது கட்டவிழ்த்து விடப்படுகிறது.

இந்தியத் தமிழர் வாக்குரிமை பறிப்பு தமிழ்மொழி உரிமை பறிப்பு, உயர் கல்வி பெறும் உரிமை பறிப்பு, தமிழ் மண் மீதான ஆக்கிரமிப்பு, தமிழ் உயிர்கள் பறிப்பு என்று தொடர்கிறது அரசின் செயல்கள்.

இவற்றிலிருந்து விடுபட எம்மிடையே ஒற்றுமை அவசியம். என்றுமில்லாத அளவுக்கு இப்பொழுது ஒற்றுமை தேவைப்படுகிறது— இவ்வாறு அவர் கூறினார்.

சண்டிலிப்பாய் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கூட்டத்தில் உரையாற்றுகையில் —

மாணவர் சமுதாயம் சீருடைகளை சீராக்க சவர்க்காரம் இல்லையே என்று கவலைப்பட்ட வேளையில் சிங்களப்படையினர் மாணவர் சீருடைகளை இரத்தக் கறையாக்கி உள்ளனர். இது சகலரின் இதயங்களையும் நெகிழ வைத்துள்ளது.

இன்று இந்த மாணவர் சமுதாயம் பாடசாலைக்குச் செல்லமுடியாத பயங்கரமான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எதுவித வற்புறுத்தலுமின்றி பேரணியில் பங்குபற்றிய மாணவச் செல்வங்களைப் பாராட்டுகிறேன் என்று அவர் தெரிவித்தார்.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் திரு. சொலமன் சிறில் உரையாற்றுகையில்—

“கடந்த காலங்களில் அனுப்பப்பட்ட மகஜர்கள் ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் கண்களிலும் காதுகளிலும் சிந்தனையைத் தூண்டும் வகையில் எட்டவில்லை”, என்று தெரிவித்தார்.

தென்னிலங்கை புத்திஜீவிகள் மதகுருமார் கூட எமது உரிமைகளைத் தரமறுக்கிறார்கள். மாறாக எம்மை அடக்க ஒடுக்க முற்படும் அரசுக்கு உதவியாக நிற்கிறார்கள் அரசின் அட்டூழியங்களை வெகுஜன அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்தும் வகையில் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

எமக்கு அரசபடைகள் புரியும் அழிப்பு வேலைகளை அரசாங்கம் மறுக்கிறது; மறைக்கிறது. நாகர்கோயில் சம்பவத்தை விடுதலைப் புலிகளின் முகாமில் குண்டு வீச்சு இடம்பெற்றது போல் பொய்யான செய்திகளை அரசு தனது தொடர்புச் சாதனங்கள் மூலம் தெரிவிக்கிறது.

இங்கே அணி திரண்ட மக்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கான எதிர்ப்பை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் என்றும் திரு. சிறில் கூறினார்.

கூட்டத்தில் வணபிதா எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் இந்துமத குருமார் சார்பில் சிவஸ்ரீ இராஜேஸ்வரக் குருக்கள், யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் மாணவர் பேரவைத் தலைவர் ந. அம்பிகைபாலன் ஆகியோரும் உரையாற்றினர். [ஒ-5-4-111]

# பாடசாலைகள், மக்கள் குடியிருப்பு மீதான இராணுவத் தாக்குதல்களை உடன் நிறுத்துக!

## ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செப். 30

நேற்றைய பேரணியின் பின் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் யாழ். அரச அதிபர் ஊடாக மகஜர் ஒன்றை அனுப்பியது.

ஒன்றியத் தலைவர் திரு சூ. சிறில் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலிடம் மகஜரைக் கையளித்தார்.

மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாண சமூகத்தின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும், பொது அமைப்புகளின் ஒன்றியமாகிய நாம் இன்று [29 – 09 – 1996] மிகப் பெருமளவிலான எண்ணிக்கையில் திரண்டு எமக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டிக்கும் பேரணியை நடத்தி. பேரதிர்ச்சியையும், கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம்.

கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 1-00 மணிக்கு வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோயில் மகாவித்தியாலயத்தின் சுற்றுப்புறத்தில் தங்களது விமானப் படையின் விமானங்கள் முதலில் குண்டுகளை வீசின.

இப்பாடசாலை கிராமப்புறத்தில் அமைந்துள்ளது. நெருக்கமான வேறு கட்டடங்கள் ஏதுமில்லை. வெள்ளைக் கொடியும் கட்டப்பட்டிருந்தது. தூரத்திலிருந்தே பாடசாலை என்பதை இலகுவில் இனங்காண முடியும்.

விமானங்கள் குண்டு வீசுவதை கவனித்த பாடசாலை அதிபர், பாதுகாப்பைக் கருதி மாணவர்களை பாதுகாப்புத் தேடி பதுங்குமாறு கேட்டுள்ளார். பாதுகாப்புத் தேடி பரிதவிப்புடன் அல்லலுற்ற வெள்ளைச் சீருடை அணிந்த மாணவர்கள் மீது பலதடவை விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. எவ்வித சந்தேகமுமின்றி மாணவர்கள் தான் என்பதை இனங்கண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இம் மிருகத்தனமான தாக்குதலினால் 23 மாணவர்கள் உடல் சிதறி இறந்தார்கள். ஏராளமானவர்கள் படுகாயமடைந்தனர். கைகால்களை இழந்தவர்கள் ஏராளம். குண்டு வீச்சினைக் கவனித்து பிள்ளைகளை மீட்கச் சென்ற பெற்றோரும் பலியாகினர்.

மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட இத் தாக்குதல், கொழும்பில் உள்ள தங்களது அதிகாரிகளினால் மறுக்கப்பட்டது. இக் கோரக் குற்றச் செயல்களை இருட்டடிப்புச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் அனைத்துலகிற்கும் செய்திகள் எட்டியுள்ளமையை தாங்கள் அறிந்திருப்பீர்கள் என எண்ணுகின்றோம்.

இது ஒரு தனித்த நிகழ்வல்ல. யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்மூடித்தனமான குரூரமான விமானத் தாக்குதல்கள் மற்றும் எறிகணை வீச்சுகளின் தொடர் நிகழ்வுகள் என்பது யாரும் புரிந்துகொள்ளக்கூடியதே. எவ்வகையிலும் இத்தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது.

ஏற்கனவே தங்களால் வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் பல்வேறு தடைகளால் பாதிப்புற்றுள்ள தமிழ் மக்கள் ஆகிய நாங்களும், எமது எதிர்கால சந்ததியும் தங்களது அத்துமீறிய இராணுவ நடவடிக்கைகளால் இன அழிப்பை எதிர் நோக்கியுள்ளோம்.

எனவே, தங்களது மேலான கவனத்திற்கு பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

★ பாடசாலைகள் மற்றும் கல்வித்துறை சார்ந்த நிறுவனங்களின் இராணுவ முகாம்களை அமைத்தலையும் மற்றும் அவற்றின் மீதான இராணுவத் தாக்குதல்களையும் உடன் நிறுத்தல்.

★ மக்கள் குடியிருப்புக்கள், தேவாலயங்கள், வைத்திய சாலைகள் ஆகியவற்றின் மீதான இராணுவத் தாக்குதல்களை உடன் நிறுத்துதல்.

★ மனிதநேய அடிப்படையில் மனித சகஜவாழ்வுக்கு ஏற்ப அன்றாட வாழ் நிலையில் சுமுகமான நிலைப்பாடுகளை தமிழர் வாழும் பிரதேசங்களில் தோற்றுவித்தல்.

★ தமிழ் மக்கள் எதிர் நோக்கும் இன அடிப்படையிலான பிரச்சினைகள் யாவற்றையும் தமிழ் மக்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வுகாணுவதற்கான அனைத்து அணுகு முறைகளும் கையாளப்படுவதற்கு உடனடி செயற்பாட்டை தாங்கள் முன்னெடுப்பீர்கள் என நம்புகின்றோம்.

—இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-1ι1]

## திருடப்பட்ட சைக்கிள்கள் மீட்பு

தென்மராட்சி, செப் 30

சாவகச்சேரி காவல்துறையினர் தென்மராட்சிப் பகுதியில் நடத்திய சைக்கிள் பரிசோதனையில் யாழ்ப்பாணம், சுன்னாகம், பருத்தித்துறை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் திருடப்பட்ட ஐந்து சைக்கிள்களை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சைக்கிள் அந்தந்தப் பிரிவு காவல் பணிமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ-117)

## புல்மோட்டையில் இரு படையினர் காயம்

கொழும்பு, செப். 30

திருகோணமலை புல்மோட்டையில் பாதை சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதன் போது 2 படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்தோர் திருகோணமலை இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-எ)

## மாத்தளை தமிழ் இளைஞர் கைது

மாத்தளை, செப். 30

மாத்தளை இரத்தோட்டை கம்மடுவ தோட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் குருநாதன் (23 வயது) எனும் கொழும்பு அங்காடி வியாபாரி கடந்த 22ஆம் திகதி மாத்தளைக்கு வந்து கொண்டிருந்த போது இரத்தோட்டை பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். (எ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் ஏற்பாடு செய்துள்ள திருமதி ம. ஜெயநாதனின் “உணவு நஞ்சூட்டலும் உணவுச் சுகாதாரமும்” எனும் பொருள் பற்றிய சொற்பொழிவு எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக பௌதிக விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [எ]

## ஆங்கில ஆசிரியர் பயிற்சி வகுப்பு

வலிதெற்கு, செப். 30

உடுவில், சண்டிலிப்பாய் கல்விக்கோட்டங்களில் ஆண்டு 3 முதல் 6 வரையான வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 7 ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும்.—

சங்கானை தெல்லிப்பழை கோட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 14 ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெற உள்ளது. ]ஓ-152)

## காயமடைந்த பொலீஸ்காரர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 30

மன்னார் புதுக்குடியிருப்பில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் காயமடைந்த பொலீஸ்காரர் ஒருவர் பின்னர் உயிரிழந்துவிட்டதாக தெரியவருகிறது.

கடந்த புதனன்று நடைபெற்ற இத் தாக்குதல் சம்பவத்தில் மேலும் இரு பொலீஸார் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)


பரி. யோவான் கல்லூரி

யாழ்ப்பாணம்.

அனைத்துலக

ஆசிரியர் தினம் 1995

பரியோவான் கல்லூரி மாணவர்களும் பழைய மாணவர்களும் இணைந்து கொண்டாடும் மேற்படி தினம் 06-10-95 வெள்ளிக்கிழமை காலை 8-15 மணிக்கு பரி-யோவான் தேவாலயத்தில் ஆராதனையுடன் ஆரம்பமாகி விழா கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பெற்றோர், பழைய மாணவர்கள் - மாணவர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

கல்லூரி மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்.

(38756)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

நூற்றாண்டு விழா வைபவ நிதிக்காக இன்று 30-09-1995 ல் நடாத்தப்படவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 30-11-1995 இற்குப் பிற்போடப்பட்டுள்ளமையை அறியத் தருகிறோம்.

– செயலாளர்.

(38708)

## அறிவித்தல்

கடந்த 15-09-95 அன்று நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் எமது சங்கத்தின் பெயர் "வடமாகாண ஒப்பந்தகாரர் சங்கம்" எனமாற்றப்பட்டுள்ளது.

மு. சி. சண்முகராசா,
செயலாளர்,

வடமாகாண ஒப்பந்தகாரர் சங்கம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/2871)

## NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக யாழ்ப்பாணம்,

**SPECIAL ENGLISH COURSE**
(விசேட ஆங்கில மொழிக்கற்கை நெறி)
**WEEKEND CLASSES**
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

- ★ A/L பரீட்சை எடுத்தவர்கள்
- ★ உயர் கல்வி மாணவர்கள்
- ★ அரச வங்கி பணியாளர்கள்
- ★ ஆசிரியர்கள்

ஆகியோருக்கு பயனுள்ள இலக்கண, இலக்கியமயமான பாடத்திட்டத்திற்கமைவானது.

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

ஆரம்பம்: 01 — 10 — 1995
Sunday 11-0) a. m. (சி-2369)

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
### VADDUKODDAI

## வெற்றிடங்கள்

பின்வரும் பாடநெறிகளில் பயிலவிரும்புவோருக்கு ஒரு சில வெற்றிடங்கள் உள்ளன. இந்நெறிகளில் இணைய விரும்புவோர் கல்வித்தகைமைச் சான்றிதழ்களுடன் 06-10-1995 (வெள்ளிக்கிழமை) க்கு முன்பாக வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள வளாகத்திற்கு சமுகமளிக்கவும்.

நேர்முகப் பரீட்சைகள் தினமும் மு.ப. 9-30 பி.ப. 2-30 வரை நடைபெறும்

| Courses | Duration |
|---|---|
| 1. DIPLOMA | |
| வரைஞர் (Draughtsmanship) | One Year (2 Semisters) |
| 2. TECHNICIAN CERTIFICATE COURSES | |
| குளிரூட்டல் (Air Conditioning & Refrigerator) | 1½ Years (3 Semisters) |
| வானொலியும் தொலைக்காட்சியும் திருத்துதல் (Radio & T. V. Repairs) | 1 Year (2 Semisters) |
| மோட்டார் இயந்திரவியல் (Automobile) | 1½ Years (3 Semisters) |
| 3. CRAFT COURSES | |
| மின்னிணைப்புப் பயிற்சி (Electrical Wiring & Installation Practice) | 1 Year (2 Semisters) |
| வெல்டிங் (Welding Practice) | 1 Year (2 Semisters) |

– இயக்குநர்.

(சி-2370)

## காஷ்மீரில் குண்டு வெடிப்பு

புதுடில்லி, செப். 30

காஷ்மீர் – ஸ்ரீ நகரில் உள்ள மத்திய தந்தி அலுவலகத்தின் அண்மையில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது.

இந்தக் கட்டடத்தை தகர்க்கும் வகையில் வைக்கப்பட்ட குண்டு உரிய பலனைக் கொடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டு வெடித்த போதிலும் எவருக்கும் காயம் கூட ஏற்படவில்லை.

[ஒ-எ]

## ஆண்டு 5 புலமைப் பரீட்சை டிசம்பர் 3 இல்

கொழும்பு செப். 30

இவ்வருடத்துக்கான 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 3 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு 3 லட்சத்து 15 ஆயிரம் மாணவர்கள் தோற்ற இருக்கின்றார்கள்.

[எ-3]

## முன்பள்ளி சிறார்களின் சிறுவர் தினவிழா

தென்மராட்சி, செப். 30

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் உள்ள 57 முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் தின விழா நாளை ஞாயிறு காலை 8-30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் தென்மராட்சி முன்பள்ளி நிலைய இணைப்பாளர் திருமதி கனகா தங்கராசா தலைமையில் நடைபெறும்.

(ஒ-117)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கட்டப்பிராய்
சின்னப்பு குணசிங்கம்
(காந்தன்)

தோற்றம்:
17 — 07 — 1946

மறைவு:
17 — 09 — 1985

திதி:
30 — 09 — 1995

எம் உயிரே!
உளமார்ந்த அஞ்சலிகள்.

மனைவி,
பிள்ளைகள்.

சிங்கராயர் ஒழுங்கை,
3ஆம் கட்டையடி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(38741)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் குணநாதன் நிமலன்

நீர்வேலி மத்தியைச் சேர்ந்த அதிபர் குணநாதன் பங்கயவல்லி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் நிமலன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (30-9-1995) தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணன் நிரோஜன், அக்கா நிஸாந்தி, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமன்மார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார், மைத்துனர்மார், மைத்துனிமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென மனமார வாழ்த்துகின்றனர்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(38737)

## இன்றும் நாளையும்

O. L. R. மகளிர் மன்றம் நடத்தும்

## மனையியற் கண்காட்சியும் விற்பனையும்

இடம்:- யாழ். அடைக்கல நாயகி ஆலயம் ஜெறோ மண்டபம்

30-09-95
01-10-95 ) மு. ப. 9-00 — பி. ப. 6-00 வரை

பிரவேசம்: ரூபா 5-00 ரூபா 2-00

J. நீக்கலஸ்
பங்குத்தந்தை.

O. L. R. திருச்சபை

(38754)

தென்மராட்சி தீவக வலய உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும்

## இறுதிப் போட்டி

இடம்: சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானம்

இன்று 30-09-95 பி. ப. 3-00 மணி

3ஆம் இடத்திற்கான ஆட்டம்:
நாவற்குழி இலக்கியன் வி. க. அணி
எதிர்
சாவகச்சேரி சிறிதாஸ் றிக்கிறேசியன் வி. க. அணி

பி. ப. 4-00 மணி சாம்பியாட்டம்:
சென்மேரிஸ் வி. க. நாவாந்துறை
எதிர்
பாடும்மீன் வி. க. குருநகர்

அனுமதி: 10/-

விளம்பர அன்பளிப்பு:
ஆரியபவான் சைவ உணவகம்
கைதடிச் சந்தி, கைதடி (38751)

## S.T.S. போக்குவரத்துச் சேவையினரின்

## இசுசு சொகுசு பஸ் சேவை

குதூகல ஆரம்பம்:- 01-10-1995
யாழ்ப்பாணம் — பருத்தித்துறை

பாதை இல. 751

தினமும் காலை 7-05 பருத்தித்துறை —
7-30 வல்வெட்டித்துறை — 8-10 யாழ்ப்பாணம்
தினமும் பி. ப. 4-00 யாழ்ப்பாணம் —
4-40 வல்வெட்டித்துறை — 5-05 பருத்தித்துறை

எமது ஸ்தாபனம் மக்களின் நன்மை கருதி குறைந்த கட்டண விகிதத்தில் விசேட பஸ் சேவையையும் நடத்துகின்றது என்பதனை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

S.T.S. போக்குவரத்துச் சேவை,
கப்ரன் பாரத் வீதி, மானிப்பாய்.

(38739)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் கல்லூரி இன நூலகம்


உ

கோண்டாவில் கிழக்கு
அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர்
தேவஸ்தான

## வருடாந்த மகோற்ஷவ 6ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

இன்று 30 – 09 – 1995 சனிக்கிழமை
காலை 10-00மணி பன்னிரு ஆழ்வார் உற்சவம்
மாலை 4-00மணி விசேட மேளக்கச்சேரி
அளவெட்டி N. K. பத்மநாதன் குழுவினர்
ஒலி: றட்ணம்ஸ் சவுண்ட்ஸ்

இங்ஙனம்:
6ஆம் திருவிழா உபயகாரர்,
ஆலய பரிபாலன சபை.

[38758]


## பரீட்சை கொடுப்பனவு இதுவரை இல்லை

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் பரீட்சை மேற்பார்வையாளர், நிரந்தர நோக்குநர், மற்றும் நோக்குநராக கடமையாற்றியவர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படாதிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வழமையாக மேற்படி கொடுப்பனவுகள் மார்ச், ஏப்ரல் மாதங்களிலேயே வழங்கப்பட்டு விடும் எனவும்—

இம்முறை பல மாதங்கள் கடந்தும் இதுவரை கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-152)

## எழுதுநர்களுக்கு நிரந்தர நியமனம்

தென்மராட்சி, செப். 30

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக எழுதுநர்களாக கடமையாற்றிய 24 பேருக்கு வடக்குக் - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தற்காலிக நியமனம் வழங்கப்பட்ட 1991ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு நியமனக் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

[எ-117]

## தரிசுக் காணி விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 30

மக்களை விவசாயச் செய்கையில் ஈடுபடுத்தவும், அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துமுகமாகவும் வன்னி மாவட்டத்தில் காணியற்ற 50 குடும்பங்களுக்கு 50 ஏக்கர் தரிசுக் காணியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வன்னி மாவட்ட கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாக வழங்கியுள்ளது.

(ஓ)


## அறிவித்தல் குரக்கன் கொள்வனவு

1995 ஆம் ஆண்டில் குரக்கன் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் இம்முறையும் பகமை வேளாண் சேவையாக ஒரு கிலோ தீட்டிய குரக்கன் ரூபா 26/- வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. குரக்கன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது குரக்கனை பின்வரும் இடங்களில் விற்பனை செய்யலாம்.

வலிகாமம்

பசுமை வேளாண் சேவை நீர்வேலி
பசுமை வேளாண் சேவை உடுவில்
பசுமை வேளாண் சேவை சண்டிலிப்பாய்
பசுமை வேளாண் சேவை கோண்டாவில்

தென்மராட்சி

பசுமை வேளாண் சேவை கைதடி
பசுமை வேளாண் சேவை சாவகச்சேரி
பசுமை வேளாண் சேவை கொடிகாமம்
பசுமை வேளாண் சேவை பளை

வடமராட்சி

பசுமை வேளாண் சேவை பருத்தித்துறை.

[சி-2356]



## பொருளியற் கல்லூரி

110/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

A/L 96, 97
கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| வர்த்தகம் | — | வரதன், சிவா |
| அளவையியல் | — | R. P. சர்மா |
| வணிகப்புள்ளி விவரவியல் | — | தவசேகர் |
| தமிழ் | — | திருமதி மீரா |
| இந்துநாகரிகம் இந்துசமயம் | — | காரை. செகிகா |
| கிறிஸ்தவம் | — | நிரஞ்சன் |
| புவியியல் | — | சனி |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் |

சனி, ஞாயிறு வகுப்பு
ஆரம்பம்: 01 - 10 - 1995
ஞாயிறு 8-00 மணி

DAY CLASS
முழுப்பாடத்திட்ட வகுப்பு
ஆரம்பம்: 02 - 10 - 1995
திங்கள் 8-00 மணி

(2361)


## புலிகளின் குரல் வானொலியில்

30 – 09 – 1995

சனி இரவு

- ★ 8-02— மாவீரர்கள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி தமிழ்க்கவிஞன் எழுதிய "வீரத்தின் விழுமியங்கள்"
- ★ 8-20— நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கலந்துரையாடுவோம்.

01– 10 – 1995

ஞாயிறு காலை

- ★ 7-02 —மாவீரவணக்கம்
- ★ 7-15— களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து களத்தில் மலர்ந்தவை

## தமிழீழ வானொலியில்

சனி மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15— வேங்கையின் நெஞ்சம்
- ★ 5-30— அறிவியல் வினாடி வினா
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-08 — ...
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — பாமாலை


## ஆரோக்கிய அன்னை திருநாள்

அரச போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

மேற்படி வைத்தியசாலையில் அமைந்துள்ள ஆரோக்கிய அன்னை சிற்றாலயத்தின் வருடாந்தத் திருநாள் நாளை(01 - 10 - 95) ஞாயிறு காலை கொண்டாடப்படும்.

இதற்கு ஆயத்தமாக இன்று மாலை5–15மணிக்குத் திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

நாளை (ஞாயிறு) காலை 6–30 மணிக்கு

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் திருநாட் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார்.

நன்றி:
வைத்தியசாலை ஆன்மகுரு.

(38759)



## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உப அதிபர்



திரு. அ. நாகரத்தினம்
B. A (Lond) Dip in - Ed
30 - 09 - 1995 இல்
ஒய்வு பெறுகின்றார்

சேவைச் சுவடுகள்

- ★ 1956 ஆம் ஆண்டு யா/ வாதரவத்தை தமிழ்ப் பாடசாலை ஆங்கில ஆசிரியர்
- ★ பயிற்றப்பட்ட ஆசிரியராக பண்டாரவளை சென் மேரீஸ்
- ★ தமிழ்ப் பிரிவு அதிபராக பண்டாரவளை சென் ஜோசப்
- ★ 1969 இல் மானிப்பாய் இந்துக்கல்லூரிஆசிரியராக,
- ★ 1979 இல் யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியராக ஆசிரியர் கழக தலைவராக, பகுதித் தலைவராக உப அதிபராக.

கல்விச் சமூகத்திற்கு தொண்டாற்றிய ஆசிரிய திலகத்தின் சேவையைப் பாராட்டுவதுடன் இவர் தொடர்ந்தும் கல்விச் சமூகத்துக்கு தொண்டாற்ற வேண்டும் எனவும் தனது வாழ்க்கைக் காலத்தில் சுகமே வாழ இறைவனை வேண்டுகிறோம்.

ஆசிரிய கழகம்,
யாழ். இந்துக்கல்லூரி.

(சி-2374)



## கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி

A/L 96 கலை வர்த்தகம்

DAY CLASS
(பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு)
முழுப் பாடத்திட்ட வகுப்பு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| வர்த்தகம் | — | வரதன் — சிவா |
| அளவையியல் | — | R. P. சர்மா |
| இந்து நாகரிகம் இந்துசமயம் | — | காரை. செகிகா |

ஆரம்பம்: 2 – 10 – 95
திங்கள் 8-00 a. m.

[சி-2359]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விதை நெல் விற்பனைக்கு

உயர்ந்து வளர்ந்து நல்ல விளைவைத் தரக்கூடிய 3½ மாத ""இளங்கலையன்"" நெல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 10, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (8751)

### நவராத்திரீப் பாமாலை

நவராத்திரி தோத்திரப் பாமாலை தொகுப்பு: வித்துவான் சி. குமாரசாமி B. A. வெளியீடு பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி–2350]

### சீயாக்காய்ப் பவுடர்

எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்ற நிலையை உணர்ந்து அதனைப் பேணிக் காக்கும் முகமாக சித்த மருத்துவ நிபுணர்கள் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்டது ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர். சீயாக்காயுடன் மூலிகைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்ட பவுடரை வாங்கி பாவித்து பலனைப் பெறுவீர்களாக. (சி–1727)

### தென்னம் நாற்றுகள்

உடன் நடுகைக்குகந்த நல்லரக தென்னம் நாற்றுகள் சாதாரணம் செவ்விளனி, வத்தாவி இனங்கள் விற்பனைக்குண்டு. மு. காமேசு ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. [38646]

### புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி ""பொது விவேகம்"" 97/–. வினாத்தாள்கள் I, II குரியது. வெளியீடு: அகிரன் பதிப்பகம். எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 18% கழிவுடன் மொத்தமாகப் பெற யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [சி–2211]

### மணமக்கள் தேவை

27 வயது, செவ்வாய் குற்றமற்ற, படித்த, அழகான பெண்ணுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு மணமகனையும், பிரபல வியாபாரிக்கு உத்தியோகம் பார்க்கும் 30 வயதிற்குட்பட்ட அழகான மணமகளையும் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். சுத்த போஜனம் விரும்பத்தக்கது தொடர்பு: இல. 978, மே/பா உதயன். [8752]

### மணமகன் தேவை

வசதியான குடும்பத்தைச் சேர்ந்த, 27 வயதுடைய குற்றமற்ற, அழகிய, படித்த மணமகளுக்கு உயர் பதவியில் உள்ள நற்குணமுள்ள மணமகன் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 851, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [38683]

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த இந்து, வயது 41, மணமகளுக்கு மணமகன் தேவை. தாரமிழந்த பொறுப்பற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். பா. யோகப்பிரகாசம், க. சே. மா. பி. ப. பணிமனை, விக்ரோறியா றோட், யாழ்ப்பாணம். [38750]

### O/L 95 பரீட்சைக்காக

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், வர்த்தகம், விவசாயம், மனையியல், சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8781]

### புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்தின்படி ஆண்டு 5க்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 1–10–95 ஞாயிறு முற்பகல் 8-00 மணிக்கு நடைபெறும் ஆண்டு 3, 4க்கான பரீட்சை இன்று முற்பகல் 8–00 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் தேவையானோர் தொடர்பு கொள்ளவும்; புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [38728]

### மிருதங்கம

புதிய மிருதங்கம் மற்றும் திருத்த வேலைகள் மிருதங்கம், தபேலா, டோல்கி முழு வேலையும் உறுதியாக செய்து ஒரு கிழமைக்குள் குறைந்த செலவில் நல்ல முறையில் தரப்படும். கோ. விஜயகுமார், இல. 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். [38716]

### O/L MATHS

G. C. E. [O/L]இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 20, நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [38745]

### சித்திர வகுப்புகள்

3–10–95[செவ்வாய்] புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. இல. 6, பென்ரிக்கோஸ் லேன், கண்டி வீதி, கச்சேரியடி. [38749]

### தவறிவிட்டது

17–9–95இல் பொன்னையா அப்புத்துரை ஆகிய எனது குடும்ப அட்டையும், நான்கு அடையாள அட்டைகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும். பொ. அப்புத்துரை, மூளாய் றோட், வட்டுக்கோட்டை. [38753]

## அறிவித்தல்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால்

நடாத்தப்படும் தையல் பயிற்சி நெறியின் பரீட்சை 11 – 10 – 1995 அன்று நடைபெறவிருப்பதால், மல்லாகம் தையல் பயிற்சி நிலையத்தில் பயின்று தற்போது இடம்பெயர்ந்துள்ள மாணவிகளை 02–10–95 அன்று காலை 10 – 12 மணிக்குஇடையில் கொக்குவிலில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்திற்கு வந்து பயிற்சி ஆசிரியையத் தவறாது சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

– மாவட்ட இணைப்பாளர்.

[38721]

## வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்

30 – 09 – 1995 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களினால் 30 – 10 – 1995 இற்குப் பிற்போடப்பட்டுள்ளது.

– வெண்புறா செயற்குழு.

குளப்பிட்டி வீதி,
கொக்குவில். (38709)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 01 | 21 |
| 07 | 09 |
| 1978 | 1993 |

செல்வன்

### குமாரகுலசிங்கம் சிவகுமாரன்

திதி: 30 – 09 – 1995

சிவா சிவா என்று நாம் சிந்திக்கின்ற வேளையில்
சிவமே என நீயும் சிவகதி அடைந்தாயோ
பெற்றவர் நாம் நின்பிரிவால் வாடுகின்றோம்
பிரியமுள்ள சோதரரும் உனை யெண்ணிக்
கலங்குகின்றார்
இத்தரையில் உன்வதனம் இனியெப்போ காண்போம்
நித்திரையில் சென்றாலும் உன்நினைவைக்
கொள்வோம்

அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணன், அத்தான்மார், மருமக்கள்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். [38726]

## புனித சின்ன திரேசம்மாள் ஆலய திருவிழா

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்திருக்கும் புனித சின்ன திரேசம்மாள் ஆலய திருவிழா இன்று மாலை 5 மணிக்கு நிகழும் திருப்பலி பூசை நற்கருணை பவனியை தொடர்ந்து

குருமுதல்வர் S. J. இம்மானுவல்

அடிகளாரின் தலைமையில் 1 – 10 – 1995 ஞாயிறு காலை 6 – 30 மணிக்கு திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனியுடன் விழா நிறைவு பெறும்.

– பங்குத்தந்தை

(38725)

## இலவச அறிமுக கருத்தரங்கு A/L 97

ஸ்ரீ ஜெயவர்த்தன புர, யாழ். பல்கலைக்கழக வணிகமாணி வெளிவாரிப்பட்டப் படிப்புகளை கடந்த 15 வருட காலம் வெற்றிகரமாக நடத்திவரும் பட்டப்படிப்புகள் கல்லூரியின் அதே அனுபவ விரிவுரையாளர்களைக் கொண்டு A/L 97 புதிய பாடத்திட்ட வகுப்புக்களை ஆரம்பிப்பதனையொட்டி இலவச அறிமுக கருத்தரங்கு 08–10–95 ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் கருத்தரங்கில் எவரும் கலந்து கொள்ளலாம்.

1. வணிகப் புள்ளி விவரவியல்

   திரு. V. சத்தியசீலன்
   உதவித் திட்டமிடல் பணிப்பாளர்
   (20 வருடகால அனுபவம் பெற்ற புள்ளி விவரவியல் பகுதி நேர விரிவுரையாளர்)

2. வணிகக்கல்வி:

   திரு. T. பாலகிருஷ்ணன் B.A (Cey)
   (பகுதி நேர விரிவுரையாளர்)

3. கணக்கீடு:

   1. நிதிக் கணக்கீடு

      திரு. V. உருத்திரசிங்கம் B. Com. (Cey)
      (பகுதி நேர விரிவுரையாளர்)

   2. முகாமைக் கணக்கீடு

      திரு. S. உமாகாந்தன் B. Com. (Cey.)
      விரிவுரையாளர்

4. பொருளியல்;

   திரு. V. அருளானந்தம் B. A (Hons)

மற்றும் பல விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பு விரிவுரைகள் கருத்துக்கள் வழங்குவார்கள்.

மாணவர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

[சி–2372]

## 15 வது ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 11 | 15 |
| 05 | 10 |
| 1920 | 1980 |

### அமரர் நாகநாதன் சங்கரநாதன்

(பிரதம சிறாப்பர், திறைசேரி)

திதி: 30–9–1995

உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும் உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

15, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம். (38735)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## வெண்தாமரை மோசடி!

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே— என்பது முந்திய காலத்துச் சினிமாப் பாடல்.

இந்தப் பாடல் இப்போது வேறு எவரையும்விட ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கே மிகவும் பொருத்தம்.

அவர் உண்மை உண்டு என்பதனை முற்றாக மறந்தவராக, எந்த அலுவலையும் பொய்யினால் செய்துமுடித்துவிடலாம் என்ற நம்பிக்கையுடையவராக, (இல்லை, இல்லை) அதனையே கொள்கையாக உடையவராக விளங்குகிறார்.

மிகக் குறிப்பாக, தமிழர் பிரச்சினையைக் கையாள்வதில் அவர் தமது திறமை மதிநுட்பம், ராஜதந்திரம் துணிச்சல் என்பவற்றைவிட பொய்யையும், பொய்ப்பிரசாரத்தையுமே நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து வீதமும் நம்பியிருக்கிறார்.

போரை முன்னெடுத்துத் தீவிரப்படுத்தி தமிழ் மக்களை இனப்படுகொலை செய்து, தாம் நினைக்கும் தீர்வைத் தமிழர்கள் மீது திணிக்க விரும்பும் ஒருவராக இருந்து கொண்டு—

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான யோசனை ஒன்றைத் தாம் சமர்ப்பித்து அரசியல் தீர்வைக் கொண்டு வரப் போகும் சமாதானப் பிரியராகக் காட்டுவது முதல்.—

சமாதானத்துக்காக என்று கூறிக்கொண்டு "வெண்தாமரை" இயக்கம் மூலம் போருக்கு நிதி திரட்டுவது வரை.—

சகலமுமே பொய்யும் போலித்தனமுமாகவே உள்ளன.

அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறின் இப்பத்தி அடங்காது. வெண்தாமரை இயக்கத்தை சந்திரிகா நடத்தும் தன்மையில் இருந்தே அவரின் பொய்யின் விகாரத்தை இலகுவில் கண்டு கொள்ளலாம்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக தென்னிலங்கையின் பல பகுதிகளுக்கும் சென்று வந்த யாழ். குருமுதல்வர் வணபிதா எஸ். ஜே. இமானுவேல் அடிகளார் வெண்தாமரை இயக்கத்தின் மூலம் எவ்வாறு போருக்கு நிதி திரட்டப்படுகிறது என்பதனை உதயனுக்கு வழங்கிய செவ்வியில் விவரித்திருந்தார்.

உலகளாவிய ரீதியாக சமாதானத்தின் சின்னமாகக் கொள்ளப்படுவது வெண்புறாவே. ஆனால் சந்திரிகா வெண்தாமரையை மிகுந்த புத்திசாலித்தனமாகத் தேர்ந்து கொண்டார்.

பௌத்தர்கள் வெண்தாமரை மலரை மிகவும் விரும்பித் தேடி எடுத்து புத்த பெருமானுக்கு அர்ச்சிப்பது உண்டு. அதன் பெயரைக் கொண்டு ஓர் இயக்கத்தை நடத்தினால் சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களிடம் பணம் திரட்டலாம் என்று திட்டமிட்டே அப்பெயரைச் சூட்டினார். அதனைச் சமயம் சார் இயக்கமாக்கி சிங்களவர்களை ஏமாற்றி மோசடி செய்கிறார்; பணம் சேர்க்கிறார்.

பொய் நிலைக்காது; உண்மை வெளிப்படும் என்பதனை உணராமல், தமது பதவியைத் தக்க வைப்பதற்காக பொய்யிலேயே அரசியல் நடத்தும் சந்திரிகா, விரைவில் தடம் புரண்டு கீழே விழுவது நிச்சயம்! மனுநீதி அதுவே

# இரு புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 30

கல்குடாப் பொலீஸ் நிலையத்தை கைப்பற்றி அழித்த தாக்குதலில் விடுதலைப்புலிப் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

2ஆம் லெப்டினன்ட் அழகப்பன் அல்லது ஜீவா (செல்லையா மனோகரன் — மட்டக்களப்பு), வீரவேங்கை செல்வம் அல்லது அரியரசன் (வைரமுத்து விக்கினேஸ்வரன் —மட்டக்களப்பு) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்கள் ஆவர். (ஒ-3)

# அள்ளிய ஆயுதங்கள்

கல்குடாப் பொலீஸ் நிலையம் மீதான விடுதலைப் புலிகளின் வெற்றிகரத் தாக்குதலில் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ரி. 81 எல், எம். ஜி. | — | 1 |
| ★ அதற்குரிய ரம் மகஸின் | — | 1 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. | — | 1 |
| ★ அதற்குரிய லிங் | — | 100 |
| ★ அதற்குரிய ரவை | — | 168 |
| ★ அதற்குரிய ரம் மகஸின் | — | 2 |
| ★ 60 மி. மீ. மோட்டர் | — | 1 |
| ★ அதற்குரிய ஸ்கோப் | — | 1 |
| ★ அதற்குரிய ஏயிம் போஸ்ட் | — | 1 |
| ★ 60 மி. மீ. மோட்டார் பைபோட் | — | 1 |
| ★ அதற்குரிய பேஸ் பிளேட் | — | 1 |
| ★ 40 மி. மீ. பிஸ்டல் | — | 1 |
| ★ அதற்குரிய ஷெல்கள் | — | 11 |
| ★ ஏ. கே. ரக துப்பாக்கி | — | 16 |
| ★ அவற்றுக்குரிய மகஸின் | — | 31 |
| ★ எஸ். 84 துப்பாக்கி | — | 1 |
| ★ எஸ். 84 மகஸின் | — | 2 |
| ★ எஸ். 84 - 1 துப்பாக்கி | — | 1 |
| ★ கைக்குண்டுகள் | — | 3 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 2,100 |
| ★ 5 56 ரவைகள் | — | 18 |

# கோண்டாவிலில் பாதுகாப்பு நிதி பெறுவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 30

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள கோண்டாவில் கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கின்ற மக்கள் அனைவரும் இன்று சனிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் மாலை 3-00 மணி வரை தாங்கள் வழங்கவுள்ள தேசிய பாதுகாப்பு நிதி பங்களிப்பினை கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள தொடர்பகத்தில் செலுத்துமாறு பாதுகாப்புநிதி தொடர்பகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## நகரில் பல்லாயிரக்கண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்விச் சமூகம் சார் அதிகாரிகள், அலுவலர்கள், பல்வேறு அரச திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், வர்த்தகர்கள், வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் யாழ். பல்கலைக்கழக முன்றிலில் வந்து திரளத் தொடங்கினர்.

எல்லோரது கரங்களிலும் அரசின் அராஜகச் செயலைக் கண்டிக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகள் காணப்பட்டன.

### சவப்பெட்டி

மாணவர் படுகொலைச் சம்பவத்தைக் குறிக்கும் வகையில், பல்வேறு அளவுகளிலுமான பிரேதப் பெட்டிகளை மாணவ மாணவியர் முன்னே காவிச்செல்ல காலை 10 - 30 மணிக்கு பல்கலை கழகத்தின் முன்றலிலிருந்து பேரணி ஆரம்பமாகியது.

"பள்ளிக்குப்போன பிள்ளைகளைக் காணவில்லை. சவப்பெட்டிகளுடன் புறப்பட்டோம்" என்று ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது.

மற்றொரு ஒலிபெருக்கி அறிவிப்பில் "பாருங்கள் எங்கள் பிள்ளைகள் சவப்பெட்டிகள் சுமக்கிறார்கள். கேவல அரசே! பார் ஊர்வலம் தொடங்குகிறது" என்று ஆசிரியர் ஒருவர் உரத்து முழங்கினார்.

உரத்து ஒருமித்த குரலில் ஸ்ரீலங்கா அரசைக் கண்டிக்கும் வாசகங்களை முழங்கியவாறு ஆசிரியர்கள் மாணவர்கள் மக்கள் அனைவரும் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது பேரணியில் நடக்கத்தொடங்கினர்.

### மகஜர்கள் கையளிப்பு

பேரணி பலாலி வீதியூடாக சென்று கந்தர்மடம் சந்தியை அடைந்து அரசடி வீதியால் திரும்பிச் சென்று கோவில் வீதியூடாக அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தை வந்தடைந்தது.

அங்கு மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அதனையடுத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வதிவிடப் பிரதிநிதி ஜோர்ஜ் குன்ஸிடமும் மகஜர் கையளிக்கப்பட்டது.

அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக கண்டி வீதிக்குச் சென்று யாழ்ப்பாண செயலகத்தை பேரணியடைந்தது.

### கண்டனக் கூட்டம்

நடு உச்சிவெயிலில் நண்பகல் வேளையில் கண்டனக் கூட்டம் ஆரம்பமாகியது.

கூட்டம் ஆரம்பித்த வேளையில் கூட பேரணி தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது.

கண்டனக் கூட்டம் வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தின் முடிவில் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கான மகஜரை திரு சிறில் மேலதிக அரசாங்க அதிபரிடம் வழங்கினார்.

கல்வி அமைச்சருக்கான மகஜர் மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மாணவன் செல்வன் சசிக்குமார் அவர்களால் வலயம் 2 இன் கல்விப்பணிப்பாளர் திரு க. கந்தசாமி அவர்களிடம் வழங்கப்பட்டது.

மாணவர்களால் பல்கலைக்கழக முன்றிலிலிருந்து காவிவரப்பட்ட சவப் பெட்டிகள், கண்டனக் கூட்டம் இடம்பெற்ற மேடையில் வைக்கப்பட்டிருந்தன.

ஸ்ரீலங்கா விமானப் படையின் குண்டுவீச்சுக்கு இலக்கான நாகர் கோவில் மகாவித்தியாலய அதிபர் சி. மகேந்திரன் அழுதபடி உரையாற்றிக் கொண்டிருந்தார்.

கொல்லப்பட்ட தனது மாணவர்களையிட்டு மிகவும் மனவருத்தமுற்று அவர் காணப்பட்டார்.

மாணவர்கள், ஆசிரியர்கள் விக்கி விக்கி அழுதபடியிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

# இறுதி வீரவணக்க கூட்டம்

கடந்த ஜூலை 28 ஆம் திகதி கொக்குத்தொடுவாயில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை காந்தாவின் (ராணி கந்தையா, பாக்கியவாசா, சந்தையடி, கோப்பாய். த. மு. கோப்பாய் தெற்கு, திருவுருவப்படமும்—

கடந்த 5 ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை கோசலையின் (கலாநிதி சின்னத்துரை, (மலர்), 7 ஆம் வட்டாரம், புங்குடுதீவு த. மு. சின்னத்துரை சீனரத்தினம், பொம்மைவெளி, யாழ்.) திருவுருவப்படமும்—

கடந்த 23ஆம் திகதி ஆனையிறவுப் பகுதியில் வெளியேற முயன்ற ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 2 ஆம் லெப் நவேந்திரனின் (சுப்பையா மணிவேல், பதுளை.) திருவுருவப்படமும்— இன்று இறுதி இராணுவ மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு நினைவுக் கற்கள் நடப்படும்.

இன்று [பி.ப. 3.00] மணியளவில் வீரவேங்கை கோசலையின் திருவுருவப்படம் அவரது தற்போதைய இல்லத்தில் இருந்தும்—

2 ஆம் லெப் நவேந்திரனின் திருவுருவப்படம் நீர்வேலி நகர் மாவீரர் மண்டபத்தில் இருந்தும்—

வீரவேங்கை காந்தாவின் திருவுருவப்படம் யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு செயலகத்தில் இருந்தும்— எடுத்துச் செல்லப்பட்டு பி. ப. 4.00 மணிக்கு யாழ்ப்பாணம், பொம்மைவெளி, அரியாலை வீதி வாழ்க்கைத்திறன் கல்வி நிலையத்தில் மக்கள் இறுதி வீரவணக்கத்திற்கு வைக்கப் பட்டிருக்கும்.

வீரவணக்கக்கூட்டம் நிறைவுற அங்கிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மூன்று மாவீரர்களின் நினைவுக் கற்களும் நடப்படும். (இ)

## கல்குடா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலின் போது காயமுற்ற பொலீஸார் பலர் தப்பி ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முகாமை முற்றாக அழித்த புலிகள் ரூப்பர், உழவு இயந்திரம் ஆகியவற்றையும் நிர்மூலமாக்கினர்,

இத்தாக்குதலை புலிகள் மேற்கொண்ட சமயம் பொலீஸ் நிலையத்திலிருந்து 300 யார் தொலைவில் உள்ள இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் உதவிக்கு வந்தனர்.

அவர்கள் மீதும் விடுதலைப் புலிகளின் மற்றுமோர் அணியினர் கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

இதன்போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்து தெரிய வரவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இத்தாக்குதல் குறித்து தகவல் வெளியிட்ட ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள், 23 பொலீஸார் உயிரிழந்தனர் என்பதையும் 12 பேர் காயமுற்றனர் என்பதையும் ஒப்புக் கொண்டனர். மேலும் சிலரின் நிலை குறித்து தெரிய வரவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ-3-6)

## அனுருத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் செய்ததாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் நேற்றிரவு தெரிவித்தது.

மன்னாகம், ஏழாலைப் பகுதிகளுக்கும் அவர் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவத் தளபதி ஜெரிடி. சில்வாவும் அவருடன் வந்திருந்தார். (இ-3)

## நெஞ்சை நெக்குருக்கிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழுகுரல்கள் எழுந்தன.

மாணவர்கள் தனக்கு முன்னால் துடிதுடித்து மடிந்து சிதறியதையும், ஆஸ்பத்திரியில் மாணவர்களின் சடலங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததையும் நேரில் கண்ட அவர் சோகமே வடிவெடுத்தாற்போல மனம் குழம்பிய நிலையில் காணப்பட்டார். மனமும், மெய்யும் நொந்த நிலையில் அதிகம் பேச முடியாதவராகவும் காணப்பட்டார்.

அவரைப் பார்த்தாலே எவருக்கும் அழுகை வரும் என்ற நிலையில், அவர் பேசத் தொடங்கியதும் எங்கும் அழுகை ஒலி எழுந்தது.

அவர் தாம் கண்ட அந்தக் கோரக் காட்சியை விவரித்தபோது நாத்தடுமாறி குரல் அடைத்து, சொற்களை விட்டு விட்டுப் பேசிய போது கூடியிருந்த எல்லோரும் கண்ணீர் மல்கினர்.

அவர் தமது பேச்சை ஆரம்பித்தபோதே விக்கித்தார். தளம்பிய குரலில் அழுதவாறே சொற்களை உதிர்த்தார்.

அன்று நடைபெற்ற காட்சி என்னைப்......பொறுத்தவரையில்......... வாழ்க்கையிலேயே என்னால்...... மறக்க முடியாதது...... என்று நெக்குருகினார் — அவரது பேச்சின் நெஞ்சை நெகிழவைக்கும் சில பகுதிகளை அப்படியே கீழே தருகிறோம்.

"— முதல் குண்டடிபட்ட இடத்திற்கு எனது சக ஆசிரியர்களுடன் சென்றிருந்தேன். ...... [தளம்பிய குரலில்] என் ...... நான் ...... படிப் ... பித்த என்னுடைய பிள்ளைகள் எல்லோரும் விழுந்து கிடந்த சோகக்காட்சியினைக் கண்டேன்.

"அவர் ...... அந்த ... இடத் ... திலேயே உடல் சிதறி...ய... நிலையிலே காணப் ...... பட்டார்கள். பிள்ளைகளைக் கூட்டிச்செல்ல வந்த சில பெற்றோரும் இறந்தும் காயப்பட்டும் ...கிடக்கக் காணப்பட்டனர்.

"— பாடசாலையிலிருந்து மந்திகைக்கு வந்தேன். மந்திகைக்கு வந்து பார்த்த போது...... எனது பிள்ளைகள் ஒழுங்கொழுங்காக...... அடுக்கடுக்காக...... அடுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். [விக்கி விக்கி அழுகிறார்] (கூட்டத்தில் இருந்தவர்களும் அழுகிறார்கள்)

"— குண்டு வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் இறந்திருந்தார்கள். அந்த மூன்று மாணவர்களையும்...... ஒரே குழியிலேயே...... [மீண்டும் குரல் எடுத்து அழுகிறார்] ...... போட்டுப் புதைத்த காட்சியினை...... நான்...... காணும் ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு ... நிலை...... கிடைத்தது.

"இப்படியொரு அவல நிலை என்னால் வளர்க்கப்பட்ட...... எனது பிள்ளைகளுக்குக் கிடைத்ததையிட்டு ...... நான் மிகவும் சோகமுற்றுள்ளேன்.

"இப்படியான தொரு நிகழ்வு எனது பாடசாலையில் மட்டுமல்ல இந்த நாட்டிலே வாழுகின்ற எந்த மாணவருக்கும் ஏற்படக்கூடாது என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

"இவ்வாறான நிகழ்வுகள் இனிமேலாவது தமிழீழத்தில் நிகழக்கூடாது என்று ஆண்டவனைப் பிரார்த்தித்து உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். (இளைப்புற்றுக் காணப்படுகிறார்) [அ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு நவரத்தினம் (சந்திரா)

காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும், தற்போது சங்கரத்தை, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு, நவரத்தினம் 28-09 95 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் ருக்மணிதேவி, நவகிஸ்ணராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ந. அன்னலட்சுமி,
(மனைவி)

தற்காலிக முகவரி:-
குளத்தடி ஒழுங்கை,
சங்கரத்தை,

(38760)

## திருமதி நடராசா இராசமணி

வேலணை கிழக்கு செட்டி புலத்தை பிறப்பிடமாக கொண்டவரும் தற்பொழுது ஐந்து சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் ஆகிய திருமதி நடராசா இராசமணி 25 – 09 – 1995 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இளையதம்பி, நடராசாவின் அன்பு மனைவியும் மணிமேகலை (பண்டிதர் குடியிருப்பு), ஆசைப்பிள்ளை [நீர்கொழும்பு], மகேந்திரன் (வவுனியா), உருத்திரன் [இந்தியா]. மஞ்சுளா, வசந்தா, மோகனராஜ்[பிரான்ஸ்], விஜியன்[பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தாயாரும், சோமசுந்தரம், கலைவாணி, இராசலெட்சுமி, குணசீலி, சந்தஞானி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 30 – 09 - 1995 இன்று காலை 10 மணியளவில் இல 115/22, நாவலர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
ந. மகேந்திரன்
(மகன்)

115/22, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(38744)

## மயில்வாகனம் மாணிக்கவாசகன்

கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாக கொண்டவரும், கட்டிட திணைக்களத்தில் கடமை ஆற்றி ஓய்வு பெற்றவருமான மயில்வாகனம் மாணிக்கவாசகன் 28 – 09 – 95 வியாழக்கிழமை அன்று கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

இவர் கொக்குவிலை சேர்ந்த காலஞ்சென்ற மயில்வாகனம், அன்னம் ஆகியோரின் புத்திரரும், ஜெயலக்ஷ்சுமியின் அன்புக் கணவரும், கல்பனா, சாதனா, ரமேஷ், சங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிவர்மா, ரஞ்சித் ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகரட்ணம், ஞானாம்பிகை, சிவசுப்பிரமணியம், கனகாம்பிகை, ராஜலக்ஷ்மி, விஜயநாதன், இரட்ணராஜா, இராஜரட்ணம், காலஞ்சென்ற சரஸ்வதி, கனகரட்ணம், சொக்கநாதன், மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இல: 39, 36th Lane,
Wellawatta.

[38742]

## திருமதி கனகபூசணியம்மா குமாரசாமி

கைதடி நுணாவிலைச் சேர்ந்த திருமதி கனகபூசணியம்மா 28 – 09 – 95 இல் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற குமாரசாமி [வேளாண்மை போதனாசிரியர்? ஆசிரியர் காணி அபிவிருத்தி திணைக்களம்]' அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பமலர். குணபூசணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பேரின்பம் (அரசினர் சித்த போதனா வைத்தியசாலை), சிவராசா (சீமெந்துக் கூட்டுத்தாபனம்] ஆகியோரின் மாமியாரும், கிருபாலினி (சாவ-இந்துக்கல்லூரி], பிரகலாதன் (டிறிபேக் கல்லூரி), சேரலாதன், சசிசாலினி ரகுநாதன், பிரிந்தாயினி ஆகியோரின் பேர்த்தியும், கனகராசா, காலஞ்சென்ற கனகசிங்கம், கனகசூரியர், கனகசந்திரன் [ஆசிரிய ஆலோசகர் கல்வி திணைக்களம்), கனகமணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் பரமேஸ்வரி' மகேஸ்வரி, சரோசினி, தவயோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 30-09-95 சனிக்கிழமை 11மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவராசா
(மருமகன்)

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

[38762)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 30

சுரப்பந்தாட்ட விளையாட்டின் நூறாவது ஆண்டு நிறைவையும், உதயன் வெளியீட்டகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவையும் ஒட்டி யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மைதானத்தில் நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 மணி — கலைவாணி வி.க அணி எதிர் இந்து இளைஞர் வி.க அணி

★ 5 மணி — நல்லூர் தெற்கு வி.க அணி எதிர் மோகனதாஸ் வி.க அணி

[ஒ-8]

★ ★ ★

தென்மராட்சி தீவகவலய உதைபந்தாட்டச் சங்கத்தினர் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 3 ஆம் இடத்தை தெரிவு செய்வதற்கான ஆட்டமும் யாழ். மாவட்ட பிரபல உதைபந்தாட்ட அணிகளும் கலந்து கொள்ளும் காட்சி ஆட்டமும் இன்று பி.ப. 3.00 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

காட்சி ஆட்டத்தில்

நாவாந்துறை சென்.மேரிஸ் அணி எதிர் குருநகர் பாடும் மீன் அணி

3 ஆம் இடத்திற்கான போட்டியில்

நாவற்குழி இலக்கியன் அணி எதிர் சாவகச்சேரி ஸ்ரீதாஸ் அணி. (ஒ-117]

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் மாணவர்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட மாணவர்களுக்கான போட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

(ஓ)

# மரண அறிவித்தல்

## திருமதி மீனாட்சிப்பிள்ளை ஆசீர்வாதம்

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாக கொண்ட மீனாட்சிப்பிள்ளை சில்வியா ஆசீர்வாதம் அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற S. ஆசீர்வாதம் [ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், மேரி யோசேப்பின், மேரி எலிசபெத், E. R. ஆசீர்வாதம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), A- S. ஆசீர்வாதம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) மேரி மாகிறேட், W. G. ஆசீர்வாதம் (பப்பாக்குணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான அரியதாசன், எட்வேட், பொன்கலன், சுகிர்தரெட்ணம், மற்றும் திருமதி M. J. ஆசீர்வாதம் (ஓய்வு பெற்ற ஆசிரியை), திருமதி A. அன்னலட்சுமி (ஓய்வுபெற்ற பரிசாரகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (30- 9- 95) காலை 10-00 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
W. G. ஆசீர்வாதம்
(மகன்)
42, [illegible]
[illegible] வீதி,
யாழ்ப்பாணம். [38769]


உ

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின்
நவராத்திரி கால

# இயல் அரங்கம்

இடம்: கம்பன் அரங்கம், நல்லூர்
காலம்: 30-09-1995 சனி மாலை 5-30 மணி

★ நிகழ்ச்சி நிரல் ★

மங்கள விளக்கேற்றல்:
நாதஸ்வர வித்துவான்
பி. ரஜீந்திரன் தம்பதியினர்

கடவுள் வாழ்த்து:
தேவார இசைமணி
இரா. திருஞானசம்பந்தன்

அகவணககம்:

தலைமையுரை:
நாதஸ்வர வித்துவான் இணுவையூர்
K. R. சுந்தரமூர்த்தி

தொடக்கவுரை:
இசைப்பேரறிஞர் சங்கீதபூஷணம்
K R. நடராசா

★ கானவேள்வி ★

பாட்டு: சங்கீதகலாவித்தகர்
திருமதி மேரி சரோஜா ஜஸ்ரின்

வயலின்: சங்கீதவித்துவான்
R S. கேசவமூர்த்தி

மிருதங்கம்: சங்கீதகலாவித்தகர்
திரு. க. கண்ணதாசன்

கெஞ்சிரா: திரு. ச. நாகராசன்

கடம்.: திரு. சதாவேல்மாறன்

★ நாதவேள்வி ★

வழங்குவோர்:
அளவையூர் லயஞானதிலகம்
எஸ். சிதம்பரநாதன் குழுவினர்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்ப்போம்

தி. திருநந்தகுமார், தலைவர்
க. குமாரதாசன், செயலர்

உபகரிக்கும் ஒப்புரவாளர்:
செல்வன் சி. ஆனந்தவேல்
கலைவாணி நகைமாடம்

(இ-2367)



# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்

95A/L பரீட்சைக்கு தோற்றிய
மாணவர்கட்குரிய
கணித - உயிரியல் பிரிவு

★ மீட்டல் வகுப்புக்கள் ★

பிரிவு II

CHEMISTRY 8. 00 - 9. 00
திரு. செல்வா

PHYSICS 9. 00 - 10. 00
திரு. கணேசன்

ZOOLOGY 10. 00 - 11. 00
திரு. தவராஜா

BOTANY 11. 00 - 12. 00
திரு. சதீஷ்

PURE / APPLIED ) MATHS 10. 00 - 12. 00
திரு. வெக்டர்

DAY CLASS

ஆரம்பம்:- 02-10-95
MONDAY 8.00 A. M

(இ/2377)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30 – 09 – 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org